

பொழிச்சலூர் புனித ஆரோக்கிய அன்னையே
எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

அருள் மழை பொழியும் **பொழிசை ஆரோக்கிய தாயே** / துண்பப்படுவோரின் துயர் துடைக்கும் தயைமிகு அன்னையே / இதோ அசைக்க முடியாத முழு நம்பிக்கையுடன் / உம்முடைய உதவியை வேண்டுகிறேன். உமது வல்லமையுள்ள மன்றட்டினால் / என்னைக் காத்தருளும். நான் எவ்வித தவறிலும், கேட்டிலும் விழாதபடி / என்னைக் கரம்பிடித்து வழிநடத்தும் தாயே / எல்லாவற்றிற்கும் மேலாக / இறை இயேசுவையே அன்பு செய்யவும் / அவருக்காகவே வாழவும் எனக்குத் துணை செய்வீராக.

ஏழைகளையும், ஆதரவற்றவர்களையும் / அன்புடன் அரவனைக்கும் அன்னையே / ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றித்திருக்கின்ற நீர் / சக்தி மிக்கவளாய் இருக்கின்றீர் அம்மா / நாங்கள் கேட்பதைத் தட்டாமல் தருகின்ற அன்புத் தாயே / துன்ப துயரங்களிலிருந்து எனனைக் காப்பாற்றும் / தீராத வியாதி வருத்தங்களிலிருந்து விடுவித்தருளும் வறுமையில் வாடும் என் வாழ்வை வளமாக்கும் / அமைதியின்றி அலையும் எனக்கு ஆறுதல் தாரும் / வாழ்வதற்கு அறியாது வருந்தும் எனக்கு வாழ வழிகாட்டும். என் குடும்பத்தையும், தொழிளையும், நிலங்களையும் பாதுகாத்தருளும். உமது, வல்லமையுள்ள மன்றாட்டினால் நீங்காத வியாதிகளை என்னிடமிருந்து நீக்கியருளும்.

*(தனிப்பட்ட கருத்துக்களுக்காக வேண்டிக் கொள்ளவும்)*

பரலோக – 1 அருள் நிறை – 3 திரி – 1

**பொழிச்சலூர் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம்** சென்னை - 74.

www.polichalurchurch.com